**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**இராமேஸ்வரம்.**
**முன்னிலை:திரு.S.B.சுஜித், B.A.B.L(Hons).,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 19-ம் நாள் சனிக்கிழமை**

**இ.ஏ.எண்.1/2025**
**இன்**
**இ.ஏ.எண்.1/2023**
**இ.பி.எண்.2/2022**
**இன்**
**அ.வ.எண்.104/2010**

பவானி ....மனுதாரர்

/எதிர்/

1.வி.கார்த்திகை ராஜன்(இறப்பு)
2.வசந்தா
3.ராஜ்குமார்
4.கிருஷ்ணமூர்த்தி
5.நாகராஜன்(இறப்பு)
6.பாலு
7.ரேணுகா .....எதிர்மனுதாரர்கள்

8.ஹேமா
9.வெங்கடேஷ் பிரசாத் (மைனர்)
10.காயத்ரி(மைனர்) .......அவசிய கட்சிக்காரர்கள்/ 5ம் எதிர்மனுதாரரின் வாரிசுகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் 17.07.205-ம் தேதி இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/வாதிக தரப்பில் வழக்கறிஞர் திரு.R.டோமினிக் ரவி அவர்கள் ஆஜராகியும், 8ம் பிரதிவாதியை அழைத்தும் வருகையில்லாததால் தோன்றாத் தரப்பினராக கருதப்பட்டு, வாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், சிபிசி கட்டளை 22 விதி 4ன் கீழ் இறந்துபோன 5ம் பிரதிவாதியின் வாரிசுகளை E.P/நிறைவேற்றுதல் மனுவில் சேர்த்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம் :-**

அசல் வழக்கான 104/2010 கண்ட தாவா சொத்து தனக்கு பாத்தியப்பட்டது

என்றும், அதனைத் தொடர்ந்து பிரதிவாதிகள் தாவா சொத்திலிருந்து ஆக்கிரமிப்பை அகற்றி கொடுக்க வேண்டி நிறைவேற்றுதல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கு 05.04.2011ம் தேதியில் தனக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது எனவும், தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் படி தான் தாவா சொத்தில் பிரதிவாதிகளின் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுத்த போது 5-ம் பிரதிவாதியான நாகராஜன் என்பவர் இறந்த விபரமானது தனக்கு நீதிமன்றத்தில் இருந்து நிறைவேற்றுதல் மனுவின் மீது அறிவிப்பு அழைப்பாணை அனுப்பி சார்பு செய்யும் போதுதான் தெரியவந்ததாகவும், அதன்பின்பு இந்த எதிர்மனுதாரர்கள் இருக்கும் முகவரியை அறிந்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

E.P.NO:2/2022 வழக்கில் 5-ம் எதிர்மனுதாரரான நாகராஜன் என்பவர் இறந்து விட்டதால், அவருடைய வாரிசுகள் அவசிய கட்சிக்கரார்களாக இருப்பதால், அவர்களுக்கு சம்மண் அனுப்பி சார்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5-ம் எதிர்மனுதாரரான நகராஜன் என்பவருக்கும் அவருடைய மனைவியான ஹேமா, அவருடைய பிள்ளைகளான வெங்கடேஷ்பிராத்(மைனர்), காயத்ரி(மைனர்) ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். அவர்களை வாரிசாக சேர்க்க உத்ததிரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>பிரச்சினை</u> :-

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

<u>பிரச்சினைக்கு தீர்வு</u> :-

3) இம்மனுவில் அவசிய கட்சிக்காரர்களான 8 முதல் 10 எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பி 8ம் எதிர்மனுதாரர் அதனை பெற்றுக்கொண்டும் ஆஜராகததால் தோன்றத் தரப்பினராக பாகிக்கப்பட்டுள்ளார். 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் minor என்ற காரணத்தினால் EA 1/25 என்ற கட்டளை 32 விதி 3 கீழ் மனு மூலமாக Court Guardian நியமிக்க மனு அனுமதித்து உத்தரவிடப்பட்டுள்ளது. வழக்கறிஞர் I.முத்துமுருகன் Court Guardian ஆக 9, 10 எதிர்மனுதாரர்கள் பொறுத்து நியமிக்கப்பட்டுள்ளார். 9, 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 'ஆட்சேபணை இல்லை' என்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாலும், 8ம் எதிர்மனுதாரர் தோன்றாத் தரப்பினறாக இருப்பதை கருத்தில் கொண்டும், இறந்த 5ம் எதிர்மனுதாரர் செல்வராஜ் வாரிசுகளை சேர்ப்பதே நீதி பரிபாலனைக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, கட்டளை 22 விதி 4 கீழான மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தகுந்த திருத்தங்கள் மேற்கொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 19 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/–S.B.சுஜித்.,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>** :– **இல்லை**

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணம்</u>** :– **இல்லை**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்</u>** :– **இல்லை**

ஒம்/–S.B.சுஜித்.,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இராமேஸ்வரம்.
இ.ஏ.எண்.1/2025
இன்
இ.ஏ.எண்.1/2023
இ.பி.எண்.2/2022
இன்
அ.வ.எண்.104/2010
நேரிய/வரைவு உத்தரவு
நாள்:19.07.2025